## 6. வரவு–செலவுத் திட்டம், 2013–2014, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2013–2014 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம். திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

**திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"குடிதழிஇக் கோலோச்சும் மாநில மன்னன்*
*அடிதழிஇ நிற்கும் உலகு"*

*குடிமக்களை அணைத்து, நல்லாட்சி நடத்தும் தலைவனின் அடியைப் பின்பற்றி நடக்கும் இந்த உலகம் என்ற தெய்வப்புலவன் வள்ளுவனின் குறளுக்கு இலக்கணமாய், அன்னை தமிழகத்தில் புனித ஆட்சி நடத்தி வருகின்ற வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் புரட்சிப் பூவாய் மலர்ந்து, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையிலே என்ன கொடுப்பார், ஏது கொடுப்பார் என்று இவர்கள் எண்ணும் முன்பே, பொன்னும், பொருளும் கொடுத்திருக்கின்றார், உணவும், உடையும் கொடுத்திருக்கின்றார், கல்வியும் வேலையும் கொடுத்திருக்கின்றார், நிதியும், வீடும் கொடுத்திருக்கின்றார். (குறுக்கீடு)*

## 5. அரசினர் தீர்மானம்—*தொடர்ச்சி*

### தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள்மீதான உரிமை மீறல் பிரச்சினையில் அவை உரிமைக் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளுதல்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாகரிகமாக நடந்துகொள்ளவேண்டும். வெளியேறிய உறுப்பினர்கள் வெளியே செல்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர்*